REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The: "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 25௨ வெள்ளி (11—10—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 26௨ சனி (12—10—57) [இதழ் 102

55,000 சர்க்கார் ஊழியர் வேலைநிறுத்தம்

டாக்கா, அக். 11—

கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த மத்திய சர்க்கார் ஊழியர்கள் 55,000 பேர் இன்று அதி காலை முதல் ஏற்கனவே அறிவித்திருந்தபடி வேலைநிறுத்தம் துவங்கி யுள்ளனர் என்று தெரியவருகிறது.

மாவட்டக் கழகங்கள் ஒழிப்பு:

'அவசரப்பட்ட நடவடிக்கைகூடாது'

'பிரச்சினை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்'

'மக்கள் கருத்தறிவிக்க அவகாசம் தரவேண்டும்'

காஞ்சி தாலுகா பஞ்சாயத்துத் தலைவர்கள் மாநாட்டில் அண்ணா

வாலாஜாபாத், அக். 11—

காஞ்சீபுரம் தாலுகா பஞ்சாயத்து போர்டு தலைவர்களின் முதல் மாநாடு கடந்த 9-ந் தேதியன்று வில்லிவலத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசுகையில் நமது அண்ணா அவர்கள், மாவட்டக் கழகங்களை அக்டோபர் இறுதியுடன் ஒழித்துவிடுவது என்ற சென்னை சர்க்காரின் முடிவு அவசரப்பட்ட முடிவு என்றும், மக்கள் கருத்தறியும் வண்ணம், முடிவினை அமுல் செய்வதை ஒத்தி வைக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்கள்.

அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"மாவட்டக் கழகங்களை ஒழிப்பதற்கு முன்பாகவோ அல்லது திருத்தி அமைப்பதற்கு முன்பாகவோ மக்களின் கருத்தறிய வேண்டியது மிக அவசியமாகும் என்பதால், இன்னும் கொஞ்சகாலத்திற்கு மாவட்டக் கழகங்களை நீடிக்க வேண்டும். உண்மையில் இந்தப் பிரச்சினையானது தீர்க்கமான ஆலோசனையும், விவாதமும் இன்றி முடிவு செய்யப்படக் கூடாத அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; இதில் அவசரப்பட்ட நடவடிக்கைகள் எதுவும் கூடாது."

மேலும் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"பஞ்சாயத்துக்களுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்க வேண்டும். மக்களின் சமூக, பொருளாதார நிலைகளை உயர்த்துவதற்காக வரிவிதிப்பு அத்தியாவசியந்தான் என்றாலும், இன்றைய வரிவிதிப்பு முறை, நம்நாட்டு மக்களிடை நிலவும் சூழ்நிலைகளுக்கு ஒப்ப அடிப்படையானதோர் மாற்றத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

அளவுக்கு மீறி

புகை பிடிப்பதால் விளையும் தீமை

டாக்டர் பெஞ்சமின் விளக்கம்

புதுடில்லி, அக். 10—

"அளவுக்குமீறி புகை பிடிப்பதும், மதுபானம் அருந்துவதும், உணவு சரியான முறையில் சீரணமாகி சத்து கிடைப்பதைச் சீர்குலைக்கும்; அதனால் இருமல் அதிகரிக்கும்; எனவே, வியாதியை எதிர்த்து நிற்பதற்கு உடலுக்குள்ள வலிமை குறையும்; முக்கியமாக, க்ஷயரோகத் தடை சக்தி குறையும்"

என்று, க்ஷயரோக நிவாரண ஆலோசகர் டாக்டர் பி. வி. பெஞ்சமின் குறிப்பிட்டுள்ளார்.

எட்டு லட்சம் தமிழருக்குத் துரோகம்

இலங்கையில் அநீதி

கொழும்பு, அக். 10—

இலங்கையிலுள்ள தோட்டங்களில் உழைத்து வாழும் 8 இலட்சம் தமிழருக்கு இக்கட்டான நிலையும், வேலை இழக்கும் பரிதாப நிலையும் உருவாகியுள்ளது.

தேயிலைத் தோட்டங்களில் இலங்கையினருக்கே முதலில வேலை தேடித்தருவதற்கு இலங்கைத் தொழிலாளர் இலாகா முயற்சி எடுத்து வருகிறது.

இதுவரையில் இந்தத் தோட்டங்களில் இலங்கைக்குக் குடியேறியவர்களுக்குத்தான் வேலை தரப்பட்டு வந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கையினருக்கு வேலையில்லாத நிலை ஏற்படாது என்றும் கூறப்படுகிறது.

ஆனால், இலங்கையினராக இதுவரை மனுச் செய்துகொண்டிருந்தும்கூட, பண்டார அரசாங்கத்தின் 'பிடிவாதப்' போக்கினால் தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையே நீடிக்கிறது என்ற உண்மையும், இலங்கையினர் என்ற அடிப்படையில் சிங்களவருக்கே வேலை தேடித் தரும் நோக்குடன் அரசாங்கம் செயல்பட முனைந்துள்ளது என்பதும் வெளிப்படையாகத் தெரியவருகிறது.

டெல்லியின் கருணையே கருணை!

சென்னைக்கு மாதம் 4,000 டன் அரிசி கடனுகத் தரச் சம்மதித்துவிட்டதாம்!

சென்னை, அக். 10—

டெல்லி சர்க்கார், சென்னை சர்க்காருக்கு, நியாயவிலைக் கடைகளில் விற்பனைக்காக மாதந்தோறும் 4,000 டன் அரிசி கடனாகத் தரச் சம்மதித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக் கடனை, அடுத்த மகசூலில் திருப்பித் தந்துவிடவேண்டுமாம்!

இனிமேல் அரிசி தரமுடியாது என்று டெல்லி சர்க்கார் அறிவித்திருந்தனர்; சென்னை சர்க்கார் பின்னர், டெல்லி சர்க்காரை அணுகிக் கெஞ்சிக்கூத்தாடி, அரிசி கடனாகவாவது தரவேண்டும் எனக் கேட்டு, இந்தக் கடன் அரிசி பெற்றிருக்கிறார்களாம்!

உணவுப் பொருளைக் குவிப்பதைத் தடுக்க!

பம்பாய் சர்க்கார் உத்தரவு

பம்பாய், அக். 10—

"எந்தவகையான உணவானாலும் 500 மணங்குக்கு மேல் வைத்திருக்கக்கூடியவர்கள், பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தங்களிடமுள்ள சேமிப்பைப் பற்றிக் கணக்குத் தர வேண்டும்"

என்று, பம்பாய் சர்க்கார், அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின்கீழ் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்த உத்தரவு, பம்பாய் மாநிலம் முழுவதிலும் நாளை முதல் அமுலாகும் என்றும், அரிசி, நெல், கோதுமை, கேழ்வரகு, மைதா மாவு முதலிய பொருள்களையும் கட்டுப்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

'சிங்களத்தை திணிப்பது சனநாயகமாகாது'

கொழும்பு, அக். 10—

"சிங்கள மொழியில் ஒரு வார்த்தைகூட தெரியாத தமிழர்கள் மீது சிங்களத்தைத் திணிப்பது சனநாயகமாகாது"

என்று, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, மதராவில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

செயற்கைச் சந்திரன்

மாஸ்கோ, அக். 11—

செயற்கைச் சந்திரன் இன்னும் சிறிது காலம் வரை வானத்திலேயே வட்டமிட்டுக் கொண்டிருக்குமாம்!

இதுவரையில் 21,87,000 மைல் தூரம் இக்கிரகம் பூமியை 70 முறை சுற்றியாகிவிட்டதாம்!

'கனவான்' அணுகுண்டு!

எதிரிகளின் இலக்குகளுக்குப் படுநாசம் விளைவிக்கும் 'ஜெண்டில்மென்' (கனவான்) அணுகுண்டு ஒன்றை பிரிட்டன் வெடித்துச் சோதனை செய்திருக்கிறது.

தென் ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட இந்தச் சோதனையுடன் பிரிட்டனின் அணுகுண்டு வரிசையில் இது மூன்றாவதாகும்.

அணுகுண்டு தாக்குதலில் ஈடுபடும் எந்த நாட்டிற்கும் எதிராகப் பிரிட்டன் இதைப் பயன்படுத்தி நாசத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

★★

அக்டோபர் 13: இந்தி எதிர்ப்பு நாள்

பொதுக்கூட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள்

★

1. திராவிடத்தின்மீது இந்தியை நேரிடையாகவும் மறைமுகமாகவும் திணிப்பதானது, தென்னாட்டவரை வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு நிரந்தர அடிமைகளாக்கும் சூழ்ச்சிமிக்கத் திட்டம் என இக்கூட்டம் கருதுகிறது.
2. மக்களின் கவனம் வேறு பக்கங்களில் திருப்பப்பட்டிருந்த நேரத்தில், ஆளும் கட்சியினர் எதேச்சாதிகாரமான போக்கில் மிக அவசர அவசரமாக நிறைவேற்றிவைத்துக்கொண்டுள்ள மொழி சம்பந்தமான அரசியல் சட்டம், தென்னாட்டு மக்களின் விருப்பத்தைப் பிரதிபலிக்க வில்லையாதலால், உடனடியாக அம்மொழி பற்றிய விதி அகற்றப்பட வேண்டும் என இக்கூட்டம் வற்புறுத்துகிறது.
3. தாய்மொழியில் ஆட்சித் துறை, நீதிமன்றத் துறை அலுவல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனும் உலகுடனும் தொடர்புகொள்ள ஆங்கிலத்தை இப்போதுபோல் தொடர்ந்து பயன்படுத்திக்கொள்வது என்ற கருத்தினை இக்கூட்டம் ஆட்சியாளருக்கு வலியுறுத்துகிறது.

குறிப்பு: அக்டோபர் 13-ம் நாளன்று இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடத்தும் தி. மு. கழகக் கிளைகள்—சார்பு மன்றங்கள்—படிப்பகங்கள் ஆகியவை மேற்கண்ட தீர்மானங்களை கூட்டத்தில் நிறைவேற்றி, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மூன்று படிகளாகத் தயாரித்து, மூன்றிலும் கூட்டத் தலைவரின் கையொப்பம் பெற்று, ஓர் படியைக் கிளைக் கழகத்திற்கு வைத்துக்கொண்டு மீதி இரு படிகளைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

தலைமைக் கழகத்திற்குக் கிடைக்கும் இரண்டு படிகளில் ஒன்றை, நமது கழகப் பாராளு மன்ற உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், தர்மலிங்கம் ஆகியோர் மூலம் இந்திய உள்நாட்டமைச்சர் அவர்களிடம் நேரில் கொடுக்கத் தலைமைக் கழகம் தகுந்த ஏற்பாடுகளை மேற்கொள்ளும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

தொழில் நீதிமன்றத் தீர்ப்புகள்

அமுல் நடத்தாதவர் மீது நடவடிக்கை

புதுடில்லி, அக். 10—

மாநிலத் தொழில் அமைச்சர்கள் மாநாடு அக். 15, 16-ந் தேதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தொழில் தகராறுகளில் வெளியிடப்படும் தீர்ப்புகளை அமுல் நடத்தாதவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க இந்த மாநாட்டில் வழிகள் ஆராயப்படும் என்று தெரியவருகிறது.

திருவனந்தபுரத்தில் வேலைநிறுத்தம்

எர்ணாகுளம், அக். 10—

பெரும்பாவூரில் உள்ள ரேயான் தொழிற்சாலையில் பணியாற்றும் 1,000 தொழிலாளர்கள் 1956-57-ம் ஆண்டுக்கான இலாபத்தில் பங்கு (போனஸ்) கோரி 7—10—57 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

டாடா இரும்பு-உருக்குத் தொழிலதிபர்களுக்குத் தேவையான அந்நியச் செலாவணியை அமெரிக்கா தர முன்வந்துள்ளது. 3.2 கோடி டாலர் தருவதற்கு உலக பாங்கி முன்வந்துள்ளது; இது, கடனாகக் கிடைத்துள்ளது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 11—10—57 வெள்ளி

அக்டோபர் பதின்மூன்று

★

'உரோமன் எழுத்துக்களைப் புகுத்துவது அளவுகடந்தத் திணிப்பு முறையாகும். அதனுல் மக்கள் ஆதரவை என்றும் பெற இயலாது. இத்தகைய அளவுகடந்தத் திணிப்பு முறை அனைத்தும், உண்மையான மக்கள் எழுச்சி உருவெடுக்குங்கால், உருக் குலைந்துபோம். தெரிந்த காரணங்களைக் கொண்டு நாம் எதிர்பார்ப்பதை விட் குறுகிய காலத்திற்குள் அத்தகு மக்கள் எழுச்சி உருக்கொண்டுவருகிறது.'

—உத்தமர் காந்தி

★

அக்டோபர் பதின்மூன்று—தமிழ் மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும், இந்தியப் பேரரசின் இந்தித் திணிப்பு முயற்சிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தும் நன்னாளாகும்.

இந்தி—தன்னுடன் பிறந்த எழுத்தைக் கொண்டில்லாதது.

இந்தி—இலக்கிய வளமற்றது—இலக்கண நெறி இல்லாதது.

இந்தி—வரலாற்று நூற்களைப் பெற்றில்லாதது—நில நூற்களைக் கொண்டில்லாதது.

இந்தி மொழியில் நிலம் வாழ்வன பற்றிய நூல் இல்லை—நீர் வாழ்வன பற்றிய நூல் இல்லை.

இந்திக்கு வான நூல் தெரியாது—வகைவகையான தொழில் நூல் தெரியாது.

இந்திக்கு பொருளியல் தெரியாது—சமய இயல் தெரியாது.

இந்திக்கு அரசியல் தெரியாது—அருங்கலை தெரியாது.

இந்தியில் அகம் இல்லை—புறம் இல்லை.

இந்தி மொழியில் எதுவுமில்லை!

அரசியல் ஆதிக்க ஆணவத்தையும்—வெறியையும் தவிர இந்தி மொழியில் வேறு ஒன்றுமில்லை!

இந்தி நம்மை ஆள வருகிறது—நம்மரும் திராவிடத்தை அடிமையாக்க முனைகிறது.

இந்தி, இந்தியத் துணைக்கண்டம் முழுதும் ஆட்சிபுரிய அவாவுறுகிறது—அறமன்றங்களிலே கோலோச்சத் திட்டமிடுகிறது.

இந்தியப் பேரரசு என்ற வடவர் ஏகாதிபத்தியம், தம்கை சிக்கியுள்ள அரசியல் அதிகாரத்தைக்கொண்டு, திராவிடத்தின் மீது இந்தியைத் திணிக்கத் தீவிரம் காட்டுகிறது.

திங்குள்ள இந்தி உடல்—வடவர் அரசியல் ஆதிக்கம் அதன் உயிர்.

இந்தியத் துணைக்கண்டம் முழுதும் திறம்படக் கோலோச்சும் ஆற்றல் இந்தி மொழிக்கு உண்டா இல்லையா என்பதல்ல நமது கேள்வி. இந்தி மொழி ஏன் என்பதுதான் நமது முழக்கம்.

தமிழகத்தை ஆள எம் தாய்த் தமிழ் உண்டு—உலகத் தொடர்புகொள்ள உலக மொழியாம் உயர் ஆங்கிலம் உண்டு என்பது நமது முடிவு.

ஆங்கிலம், ஆங்கிலேயர்களுக்குமட்டுமே உரித்தான தனிவுடைமை அல்ல—அம்மொழி உலகத்தவர் அனைவருக்கும் உரித்தான பொதுவுடைமை.

உலகத்தவர் அனைவருக்கும் உரித்தான ஆற்றல்மிக்க மொழி ஆங்கிலம் என்பது, இந்தி வெறியினராலும் ஒப்பமுடிந்த உண்மை.

மக்களாட்சி, மக்கள் சபை, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, தேர்தல், வாக்கெடுப்பு, சட்டசபை, சட்டமியற்றல், அறமன்றம், வழக்காடல் இன்னோரன்ன பல, ஆங்கில மொழி வகுத்துத்தந்த சொல் முறைகளை அப்படியே பின்பற்றி வரும் இந்தி வெறியினர், ஆங்கில மொழியை மட்டும் ஒழித்துக்கட்ட முனைவது முறையா? அறமா?

ஆங்கிலம் தந்த மற்றவற்றால் அழிந்துபடாத தன்மானம் ஆங்கில மொழியினை என்றும் ஏற்றிருப்பதால் மட்டும் எப்படி அழிந்துபடும்?

இந்தியால் இயலாத உலகத் தொடர்பை இனியும் ஆங்கிலம் தானே தேடித்தரப்போகிறது? அப்பொழுதுஎன்னவது, இந்தி வெறியர்களின் தன்மானம்?

இந்தி வெறியர்களுக்கு ஆங்கிலம் 'அன்னிய மொழி'யாக இருப்பது போன்றே, தமிழ்—திராவிட மக்களுக்கும் இந்தி அன்னிய மொழிதானே? அன்னிய மொழியான ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்வதால் இந்தி வெறியர்களின் தன்மானத்திற்குக் களங்கம் ஏற்படுகிறது என்பது உண்மையானல், அன்னியமொழியான இந்தியை ஏற்றுக்கொள்வதானல் தங்கள் தன்மானமும் பறிபோய் விடுமே என, தமிழ்-திராவிட மக்கள் சிந்திக்காரோ? இந்தி வெறியரைப் பின்பற்றி, இந்தியை ஏற்க தமிழ்-திராவிட மக்கள் மறுக்காரோ?

கட்டுரை துவக்கத்தில் குறிப்பிட்டிருப்பது உத்தமர் காந்தியாரின் திருவாக்காகும். அதில் அவர் கூறுகின்ருர்—'அளவு கடந்தத் திணிப்பு முறை அனைத்தும், உண்மையான மக்கள் எழுச்சி உருவெடுக்குங்கால் உருக்குலைக்கப்பட்டுவிடும்' என்று, திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பேரரசின் இந்தித் திணிப்பு, உத்தமர் காந்தியார் மணிவாக்கின்படி 'அளவு கடந்தத் திணிப்பு முறை'யேயாகும் என்பதை மறுப்பவர் எவரும் இலர். 'உண்மையான மக்கள் எழுச்சிக்கு முன்னல் அவை அனைத்தும் உருக்குலைந்து போம்' என்ற முடிவையும் அவ்வுத்தமரே அழுத்தம் திருத்தமாக அறிவித்துள்ளார்.

உத்தமர் தந்த உயர்கருத்தை நன்கு உணர்ந்துள்ள காரணத்தால்தான் மக்கள் சபையில் இந்தித் திணிப்புக்கு எதிராக, 'எங்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உலகில் எந்த சக்தியும் இச்சகம் பேசியோ அச்சுறுத்தியோ, இந்தி ஏகாதிபத்தியத்திற்கு எங்களைப் பணிய வைத்துவிட் முடியாது' என்று இளவல் சம்பத் முழக்கமிட்டிருக்கின்ருர்.

அவ்வீர முழக்கம் தமிழகம் எங்கணும் வெடித்துக் கிளம்பும் நாள் அக்டோபர் பதின்மூன்ருகும்.

அந்த மக்கள் எழுச்சிக் குரல் பயனற்றுப் போகப் போவதில்லை. அவ்வீரக் குரல் வடவர் ஏகாதிபத்தியத்தைத் தாக்குவது நிச்சயம். நாம் வெற்றி பெறுவதும் நிச்சயம்.

ஆட்சி மொழி இந்தி ஒழிக! வடவர் ஏகாதிபத்தியம் ஒழிக!

இந்தித் திணிப்பை எதிர்த்து முழக்கம்

திருவைகுண்டம் வட்டாரத்தில் பொதுச்செயலாளர்

திருவைகுண்டம், அக். 5—

28—9—57-ல் திருவைகுண்டத்திற்கு வருகை தந்திருந்த பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

நண்பகல் 1-30 மணிக்கு புகை வண்டி நிலையத்தில் உள்ளூர் கழகத் தோழர்களும், திருவைகுண்டம் வட்டார அமைப்பாளர் தோழர் வ. செகவீராசேந்திரன், ஆ. அண்ணாமலை, நகரச் செயலாளர் தோழர் கா. நயினர், மற்றும் ஏராளமான தோழர்களும் வாழ்த்தொலிகளுடன் மாலை சூட்டி பொதுச்செயலாளரை வரவேற்றனர்.

மாலை 5 மணிக்கு புகை வண்டி நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. பொதுச் செயலாளர், மற்றும் வழக்கறிஞர் சு. இரத்தினவேல் பாண்டியன், மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் காரிலே அமர்ந்திருக்க சிலம்ப விளையாட்டுடன் ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியே சென்று பொதுக்கூட்டத் திடலான ஐந்து விளக்குத் திடலை அடைந்தது.

தோழர் வ. செகவீராசேந்திரன் பொதுச்செயலாளரை வரவேற்றுப் பேசி, வாழ்த்திதழ் வாசித்தளித்தார்.

பின்னர் மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தலைவர் உரைக்குப்பின் பம்பாய்த் தோழர் ஆரிய சங்காரன், பம்பாய் மக்கள் நிலை பற்றிச் சிறிது நேரம் பேசினர்.

அடுத்து தோழர் ஆ. அண்ணாமலை பேசுகையில் திராவிட இயக்கங்களை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று கூறிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரின் பேச்சைக் கண்டித்தார்.

அடுத்து வழக்கறிஞர் தோழர் இரத்தினவேல் பாண்டியன் 'சட்டமும் விவசாயிகளும்' என்பது பற்றிப் பேசினர். அடுத்து மக்களின் பலத்த ஆரவாரத்திற்கிடையே பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசினர்கள்.

கழகம் தற்போது பெற்றிருக்கிற வளர்ச்சி பற்றி விளக்கியும் சட்டமன்ற நுழைவுக்குப்பின் கழகத்திற்குப் புதுப்புது இடங்களிலிருந்து கிடைத்துள்ள ஆதரவு பற்றியும் மாநில அமைச்சர்களின் போக்குபற்றியும் விளக்கிவிட்டு இந்தி இந்தியாவின் பொது மொழியாக இருக்க எள்ளளவும் தகுதியில்லை என்பதனை புள்ளி விவரத்தோடு விளக்கினர்.

"இந்தித் திணிப்பு 1937-ல் நடைபெற்றபோது நாம் ஒன்று திரண்டு போராடி முறியடித்தோம்; அன்று, 'இந்தியைப் புகுத்தியே தீருவேன்' என்ற ஆசசாரியார் இன்று 'இந்தி இன்று மட்டுமல்ல—என்றுமே தேவையில்லாதது' என்று முழக்கமிடுகிருர். பலமுறை முறியடிக்கப்பட்ட இந்தி இன்று மீண்டும் படையெடுக்கிறது; இந்தத் தலைமுறையிலேயே இந்தி ஒழிக்கப்பட்டாக வேண்டும்" என்று கூறி 'அக். 13-ம் நாள் நாடெங்கும் கண்டனக் குரல் ஒலிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

பொதுச்செயலாளருக்கு சுற்று வட்டாரக் கிளைக் கழகங்களினல் ஏராளமான மலர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. தேர்தல் நிதியும் வழங்கப்பட்டது.

அனவரதநல்லூர்:

பின்னர் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன், தோழர்கள் இரத்தினவேல்பாண்டியன், ஆ. அண்ணாமலை, டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோருடன் அனவரதநல்லூருக்குப் புறப்பட்டுச் சென்ருர். நேரம் 10-15 ஆகியும் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு ஆர்வத்தோடு குழுமியிருந்து பொதுச்செயலாளரை வரவேற்ருர்கள்.

தோழர் பெருநைமீனன், தலைமையில் பொதுக்கூட்டம் துவங்கியது. தோழர்கள் எப். எஸ். அரியமுத்து, என். சங்கரலிங்கம், வழக்கறிஞர் இரத்தினவேல்பாண்டியன் ஆகியோர் பேசியபின் பொதுச்செயலாளர் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கியும், சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றியும், இந்தித் திணிப்பு பற்றியும் மிகத் தெளிவாக விளக்கிப் பேசினர்கள்.

கிராம மக்கள் மிகத் திரளாகக் குழுமியிருந்து ஆர்வத்தோடு, பொதுச்செயலாளரின் பேச்சைக் கேட்டு புதிய உணர்ச்சி பெற்ருர்கள்.

பொதுச்செயலாளர் அவர்கட்குப் பல கிளைக் கழகங்களின் சார்பில் ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் சூட்டப்பட்டன. தோழர் பெருநைமீனன் நன்றி கூறினர்.

அணுகுண்டால் அழிந்த நகரை நேரில் கண்டபின்

ஹிரோஷிமா, அக். 10—

அக். 4-ந் தேதியன்று ஜப்பானுக்குச் சென்ற பண்டித நேரு, ஹிரோஷிமா பகுதியை நேரில் கண்டார்.

12 ஆண்டுகளுக்கு முன்—6—8—45 காலை 8-15 மணிக்கு, முதலாவது அணுகுண்டு ஹிரோஷிமாவில் போடப்பட்டது. 7 சதுர மைல் பரப்பளவு உள்ள இந்தப் பகுதியில் 4·1 சதுர மைல் அழிக்கப்பட்டது. 2,60,000 பேர் இதன் காரணமாகக் கொல்லப்பட்டுள்ளனர்; பல்லாயிரக்கணக்கானவர்கள் கதிரியக்கத்தினல் பாதிக்கப்பட்டனர்.

அடுத்து 9—8—45-ல், இரண்டாவது அணுகுண்டு நாகசாகி மீது வீசப்பட்டது; கப்பல் கட்டும் துறைமுகமான இந்த நகரம் பெருத்த சேதமடைந்தது; மறுநாள் 2-வது உலகப் போரில் ஜப்பான் சரணடைந்தது.

"அணு ஆயுதங்களைத் தடை செய்வது, உலகில் மனச்சாட்சி உள்ள எல்லா மக்களின் கடமை ஆகும்; ஹிரோஷிமா மக்களுடன் நானும் இதற்காகச் சேர்ந்து வாதாடத் தயாராக இருக்கிறேன்" என்று, பண்டித நேரு அங்கு பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

முதல் திட்ட காலத்தில் நபர் வருமான விகிதம்

ரூ. 22 உயர்ந்ததாம்!

புதுடில்லி, அக். 9—

முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியாவில் நபர் வருமானம் ரூ. 22 மட்டுமே உயர்ந்தது என்று கூறப்படுகிறது.

1951-52-ல் ரூ. 250.1; 1952-53-ல் ரூ. 256.6; 1953-54-ல் ரூ. 268.7; 1954-55-ல் ரூ. 271.9; 1955-56-ல் ரூ. 272.1 என்று, நபர் வருமான விகிதம் இருந்ததாக புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

எனவே, முதல் திட்ட காலத்தில் வருமான உயர்வு ரூ. 22 மட்டுமே அதிகமாயிற்று என்பது தெளிவு.

'மக்கள் இனியும் தியாகம் செய்ய முடியாது'

'ஐந்தாண்டுத் திட்டத்தைத் திருத்தியே ஆகவேண்டும்'

பதஞ்சலி சாஸ்திரியார் கருத்து

அண்மையில் சென்னையில் நடந்த இளைஞர் சங்கக் கூட்டமொன்றில் இந்தியாவின் முன்னள் தலைமை நீதிபதியான திரு. பதஞ்சலி சாஸ்திரி பேசுகையில், இந்தியப் பேரரசின் ஐந்தாண்டுத் திட்டத்தையும், திட்டத்தை நிறைவேற்ற இயலாத நிலைமையில் உள்ள இந்தியப் பேரரசின் அவலநிலை குறித்தும் கருத்துத் தெரிவித்தார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியம் ஏற்படும் பொழுது, திருத்தியே ஆகவேண்டும்; இதில் கௌரவம் எதுவும் பார்க்கக்கூடாது.

"அரசியல் அமைப்புச் சட்டத்தையே—அதைப் புனிதமாகக் கருதாமல்-அடிக்கடி திருத்திக்கொண்டு வருகின்றனர்; அப்படியிருக்கையில், ஐந்தாண்டுத் திட்டத்தைப் புனிதமாகக் கருதுவதற்கு ஒன்றுமில்லை.

"இனிமேல் கொடுக்க முடியாது என்கிற அளவிற்கு மக்கள்மீது வரிகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. நிதியமைச்சர் புதிதாக விதிக்கக்கூடிய வரி இனி ஒன்றுமே இல்லை என புதுடில்லியைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் கூறினர்.

"அதிகச் சம்பளம் தர வேண்டுமென்றும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்றும் எங்கு பார்த்தாலும் இப்பொழுது குரலெழுப்பப்பட்டு வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மக்கள் அதிகப்படியாகத் தியாகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.

"நாட்டு விடுதலைப் போராட்டத்தின்போது மக்கள் மகிழ்ச்சியுடன் பெருந்தியாகம் செய்திருக்கின்றனர். மக்கள் மேலும் தியாகம் செய்ய வேண்டுமெனக் கூறுவதில் நியாயமில்லை."

'திராவிடம் பிரியும் நாள் நெருங்குகிறது'

சேலத்தில் கா. அப்பாதுரை உரை

சேலம், அக். 5—

சேலம் — அம்மாப்பேட்டையில் 29-9-57 மாலை, என்.எஸ்.கே. சொற்பயிற்சி மன்றத் துவக்க விழாவும், கே. வி. கே. சாமி நினைவு நாளும், தோழர் சி. ஏ. சித்தையன் தலைமையில் நடைபெற்றது.

சேலம் நகர தி. மு. கழகச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் பேசுகையில், சேலத்தில் எவ்வாறு தி. மு. கழகம் வளர்ச்சியுற்று வருகிறது என்பதைக் குறிப்பிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சாதிக் கலவரம் நடைபெற்று வருவதை காங்கிரஸ் அரசாங்கம் சரியான முறையில் தடுக்கத் தவறிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தோழர்கள் வி. சிவப்பிரகாசம், கே. எஸ். மணி ஆகியோரும் பேசினர்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"சேலம், கைத்தறி ஆடைக்குச் சிறப்பு பெற்ற இடம். கலைக்கும் சேலம் சிறந்து விளங்குகிறது. சேலத்தில் கலைவாணர் என். எஸ். கே. சொற்பயிற்சி மன்றம் துவக்குவது பொருத்தமான செயலாகும். என்.எஸ்.கே. அவர்களின் பிரிவு நமக்குப் பெரிய இழப்பாகும். தமிழ் நாட்டுக்கு அவர் செய்த சேவைகளை யாரும் எளிதில் மறக்க முடியாது. நல்ல பகுத்தறிவுக் கருத்துக்களை நகைச்சுவைமூலம் அவர் பரப்பியதுபோல் வேறு யாரும் இதுவரையில் செய்ததில்லை. நடிகர்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்ல தொடர்பை அவர் உண்டுபண்ணினார்.

"தமிழகத்தில்தான் உண்மையான தேசியம் உள்ளது. தமிழ் அரசர்கள் ஆண்ட காலத்தில் சமஸ்கிருதம் (வடமொழி) தென்னாட்டில் நுழைந்தது; திருமணச் சடங்குகள் சமஸ்கிருத மொழியில் நடத்தப்பட்டன; கோவில் அர்ச்சனைகள் சமஸ்கிருத மொழியில் நடைபெற்றன; அவற்றின் காரணமாகத் தமிழ் வளர்ச்சி தடைப்பட்டது. ஆங்கிலம் வந்தபின் சமஸ்கிருத மொழியின் கொடுமைகள் சிறிது மாறலாயின.

"ஆச்சாரியார் 1937ல் சென்னையில் முதலமைச்சராக இருந்தபொழுது சட்டாயப் பாடமாக இந்தியைக் கொண்டுவர முயற்சித்தார்; அதன் பயனாய் இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழ் நாட்டில் துவங்கியது. இந்தி விரட்டப்பட்டது. திராவிடர் இயக்கம் வலுப்பெறுவதற்கும் இந்தித் திணிப்புதான் காரணமாயிருந்தது.

"திராவிடரியக்கத்துக்கு தான் தலைவர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள்; மற்றக் கட்சிகளுக்கு வடநாட்டில்தான் தலைவர்கள் இருக்கிறார்கள்.

"இப்பொழுது மீண்டும் இந்தி மொழியைக் கொண்டுவரப் பார்க்கிறார்கள். ஆகவே திராவிட நாடு தனியாகப் பிரியும் காலம் அண்மையில் வந்துவிட்டது என்று சொல்லலாம். ஆச்சாரியாரே இப்பொழுது இந்தியை எதிர்க்கிறார். அவரும், காமராசரும் திராவிட நாட்டுப் பிரிவினைக்காகப் பாடுபடும் நாளும் விரைவில் வரும்.

"உலகில் மிகவும் பிற்போக்கான தேசியம் வட இந்திய தேசியம். தென்னாட்டுத் தேசியம் மிகவும் முற்போக்கானது. இந்தியைத் தென்னாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டும்." (ந-நி.)

விடுதலையடைந்தோரைச் சீர்திருத்தும் நிலையங்கள்

தமிழ்நாட்டில் 7 மாவட்டங்களில் நிறுவுவதற்கு அனுமதி

சென்னை, அக். 8—

சீர்திருத்த நிலையங்கள், சிறைகள் முதலியவைகளிலிருந்து விடுதலையானவர்களைக் கவனிப்பதற்கான ஏழு விடுதிகளை நிறுவ அரசாங்கம் அனுமதித்துள்ளது.

அனாதை விடுதிகளிலிருந்து வெளிவரும் சிறுவர்களுக்காக ஒரு விடுதி அமைக்கப்படும்.

மதுரை, தஞ்சை, பாளையங்கோட்டை, கோவை ஆகிய இடங்களில் ஆண்களுக்காக நான்கு விடுதிகளும், காரைக்குடி, செங்கல்பட்டு, காஞ்சீபுரம் ஆகிய இடங்களில் பெண்களுக்காக மூன்று விடுதிகளும் நிறுவப்படும்; ஒவ்வொன்றிலும் 25 பேர்களுக்கு இடவசதி இருக்கும்.

ஒவ்வொருவருக்கும் நாள் ஒன்றுக்கு ரூ. 1 என்ற அடிப்படையில் பராமரிப்புச் செலவுக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது.

குற்றம் புரிந்தவர்கள் முழு அளவில் உள்ளச் சீர்திருத்தம் அடைவதற்கு, விடுதலையான பின்பு இத்தகைய நிலையங்களில் அவர்கள் இருக்கவேண்டியது அவசியம் என்பது உணரப்பட்டதுதான் இந்த நிலையங்களை அமைப்பதின் நோக்கமாகும்.

'இந்தியை ஒழிப்பதில் எல்லாக் கட்சிகளும் முனைய வேண்டும்'

சேலத்தில் கி. மனோகரன் பேச்சு

சேலம், அக். 7—

சேலம் 6-வது வட்டத்தில் 6—10—57 மாலை தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று, சேலம் நகர தி. மு. க. செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகம் எவ்வாறு நாளுக்குநாள் வளர்ச்சியுற்று வருகிறது என்பதையும், தமிழ்நாட்டில் புகுத்தப்படவிருக்கும் இந்தியை மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு விரட்டியடிக்க வேண்டுமென்றும் தலைவர் விரிவாகப் பேசினார்; பின்னர் சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் பேசினார்.

தோழர் கி. மனோகரன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட்டவுடன், மற்றக் கட்சிகள் தி. மு. கழகத்தையும், தனிப்பட்ட முறையில் தி. மு. கழக அபேட்சகர்களையும் தாறுமாறாகப் பேசி பிரச்சாரம் செய்தன. அவர்கள் ஏமாறும்வகையில் 15 பேர் தி. மு. கழகத்தில் வெற்றிபெற்றார்கள்.

"சட்டசபையில் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் 'பார்லிமெண்டு முறை'யில் பேசத் தெரியாமல் தவிப்பார்கள் என்று சிலர் கனவு கண்டார்கள். இதுவரையிலும் சட்டசபையில் கழக எம். எல். ஏ.-க்கள் பேசிய பேச்சுக்களை நீங்கள் கவனித்திருப்பீர்கள்; பார்லிமெண்டு முறை தவறாமல் அவர்கள் நடந்திருக்கிறார்கள். சில காங்கிரஸ் எம். எல். ஏ.-க்கள் பார்லிமெண்டு முறை தவறி சட்டசபையில் பேசியதையும், அவர்களை சபாநாயகர் திருத்தியதையும் நீங்கள் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். தி. மு. கழகத்தினர் என்றும் முறை தவறி பேசமாட்டார்கள்.

"காங்கிரஸ்காரர்களும், மந்திரிகளும் மேடைகளில் தி. மு. கழகத்தைக் கண்டவாறு தாக்கிப் பேசுகிறார்கள். அவர்கள் பேசும் அந்த மட்டரகமான பேச்சுகளுக்கு நாங்கள் மட்டரகமாகப் பதில் கொடுக்கத் தயாராக இல்லை. முறை தவறி மோசமான வார்த்தைகளைப் பேச நாங்கள் விரும்பவில்லை.

"தி. மு. கழகத்தில் வாலிபர்கள்தான் இருக்கிறார்கள்; வாலிபர்களாக இருந்தபோதிலும், கடமை-கட்டுப்பாட்டிலிருந்து சிறிதும் விலகாமல் பணியாற்றுகின்றனர். தங்களை மாற்றுக் கட்சியினர் மோசமாகத் தாக்கிப் பேசியபோதிலும், பதிலுக்காகத் திருப்பித் தாக்கிப் பேசாமல் அமைதியாகப் பொறுமையுடன் அவர்கள் இருக்கிறார்கள்; அவ்வாறு இருப்பதால், தி. மு. கழகத்தினரைக் கோழைகள் என்று எண்ணிவிடவேண்டாம்; கட்சிக் கட்டுப்பாட்டுக்கு மதிப்பளித்து அவர்கள் பணியாற்றி வருகின்றனர்.

1937-ல் இராசகோபாலாச்சாரியார் சென்னையில் முதன் மந்திரியாக இருந்தபொழுது இந்தியைப் புகுத்தினார்; அப்பொழுது இந்தி விரட்டியடிக்கப்பட்டது. அப்பொழுது அது மொழிப் பிரச்சினையாக இருந்தது; இப்பொழுது மீண்டும் தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்தப் பார்க்கிறார்கள். இப்பொழுது இது நாட்டுப் பிரச்சினையாக ஆகிவிட்டது; இராசகோபாலாச்சாரியாரே இந்தியை எதிர்க்கிறார். '1965-க்குள் இந்தி தேசிய மொழியாகவேண்டும்' என்று சட்டத்தில் எழுதிவைத்ததற்காக இந்தியை இம்மாதிரி கட்டாயமாகப் புகுத்தவேண்டுமா? ஏன் சட்டத்தைத் திருத்தக் கூடாது? இந்தியைப் புகுத்துவதற்கு அவ்வளவு அவசரமும் அவசியமும் இப்பொழுது ஏன் ஏற்பட்டது? இந்திமொழி புகுத்தப்பட்டால் தமிழ் வளர்ச்சி தடைபடுவதோடு நம்நாட்டு மக்களின் நல்வாழ்வும் பாதிக்கும். நாட்டுப் பிரச்சினையாக விளங்கும் இந்திப் பிரச்சினையை அசட்டையாகப் பாவிக்கக்கூடாது. ஏனைய கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து இந்தியைத் தமிழ்நாட்டில் புகுத்தாமல் தடுக்கவேண்டும்.

6-வது வார்டில் உள்ள நகராண்மைக் கழகக் காய்கறி மார்க்கெட்டை நிரந்தரமாகக் கட்டுமாறும் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்குமாறும் நகராண்மைக் கழகத்தைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேறியது.

சேலம் 17-வது வட்டத்தில் :

சேலம் 17-வது வட்டத்தில் 6—10—57-ல் நடைபெற்ற தி. மு. கழகக் கூட்டத்தில் தோழர்கள் கி. மனோகரன், ஈ. ஆர். கிருஷ்ணன், மற்றும் பலரும் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும் எவ்வாறு தி. மு. கழகம் வளர்ச்சியுற்று வருகிறது என்றும், கட்டாயமாகப் புகுத்தப்படவிருக்கும் இந்தியை விரட்டவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும் பேசினார்கள். (ந. நி.)

★★★

'இந்தியை எவர் மீதும் திணிக்க மாட்டோம்'

என்று உறுதிமொழி தருகின்றனர் வஞ்சகர்கள்

ஆனால்...

★ இரயில்வே, தபால்-தந்தி, தற்காப்பு, வெளிவிவகாரத் துறைகளில் இந்தித் திணிப்பு முடிந்துவிட்டது !

★ இதர நிர்வாகத் துறைகளும் வேகமாக இந்தி மயமாகி வருகின்றன !

★ இந்த 'ஏக இந்திய' ஏகாதிபத்திய வெறிச்செயலை சட்டரீதியானதாக்கத் திட்டம் முடிந்துவிட்டது !

★

'புனிதமான' அரசியல் சட்டம்

அது புகலிடமளித்துக் காப்பாற்றிவரும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால்

அநியாயமாகக் கற்பழிக்கப்படுகிறது

★

1. யூனியன் ஆட்சி மொழியாக இந்திமொழி தேவநாகிரி லிபியில் இருக்கும்.

   யூனியன் அரசாங்கக் காரியங்களுக்கான இலக்கங்கள் சர்வதேச முறை இலக்கங்களாயிருக்கும்.

2. முதலாவது பிரிவில் சொல்லப்பட்டிருப்பதன்னியில், இந்த அரசியல் சட்டம் துவங்குவதிலிருந்து பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு, இந்த அரசியல் சட்டம் அமுலாகத் துவங்குவதற்கு முன்புவரை எந்த அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் ஆங்கிலம் உபயோகிக்கப்பட்டுவந்ததோ, அந்த அரசாங்கக் காரியங்களுக்கெல்லாம் ஆங்கிலமே தொடர்ந்து உபயோகிக்கப்பட வேண்டும். வேண்டுமானால் குடியரசுத் தலைவர், மேற்குறிப்பிட்ட காலத்தில் ஏதாவது அரசாங்கக் காரியங்களுக்கு ஆங்கில மொழியுடன் இந்தி மொழியையும் சர்வதேச முறை இலக்கங்களுடன் தேவநாகிரி இலக்கங்களையும் உபயோகிக்கலாம்; உத்தரவு மூலம் அதிகாரம் அளிக்கலாம்.

—இவை இந்திய அரசியல் சட்ட 343-வது விதியின் முதல் இரு பிரிவுகள்.

★

இந்த விதி 'அகில இந்திய' வெறியர்களால் மூர்க்கத்தனமாக மீறப்பட்டிருப்பதை, தமிழ் நாட்டில் வழங்கப்படும் கார்டுகள்—அவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் இந்தி எழுத்துக்கள் நிரூபிக்கின்றன.

★

இந்தித் திணிப்புத் தீவிரமாகி வருகிறது!

நியாயம்— கோவெனக் கதறுகிறது!

நீதி— கண்ணீர் சிந்துகிறது!

நேர்மை— வாய்விட்டு அழுகிறது!

★

வடவரின் இந்த ஏகாதிபத்திய வெறியாட்டத்தைத் தடுத்துநிறுத்த

அக். 13: இந்தி எதிர்ப்பு நாள்

★

தாயகத்தோரே! திராவிடரே! வீரர்களே!

வீணர்தம் ஆணவத்தை வீழ்த்திட

விழித்தெழுவீர்! வீறுகொள்வீர்!

குவாடிமாலாவின் விழிப்புணர்ச்சி!

நியூயார்க், அக். 9—

ஹோண்டுராஸ் பகுதியை பிரிட்டன் தனது வசம் வைத்துக்கொண்டிருப்பதற்கு எந்தவித நியாயமும் இல்லை என்றும், வெறும் ஆதிபத்திய ஆக்கிரமிப்பும், மிருக பலமும்தான் இதற்குக் காரணம் என்றும், ஐ. நா. சபையில் குவாடிமாலாவின் தூதுவர் ஆர்னலஸ் என்பவர் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னை மாநிலப் பெரிய போலீஸ் அதிகாரி

தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்

சென்னை, அக். 10—

சென்னை மாநிலப் பெரிய போலீஸ் அதிகாரிகளில் ஒருவரான திரு. மகமத்கான் என்பவர், வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

அவர் மீது இலஞ்ச ஊழல் புகார் கூறப்பட்டுள்ளதை ஆராய விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளது, சென்னை அரசாங்கம்.

போர் முரசு ஒலிக்கிறது-வீர முழக்கம் கேட்கிறது-

அக். 13: இந்தித் திணிப்பை எதிர்த்து நாடெங்கும் கண்டனக்குரல்

கோவை :
பேசுபவர் : அண்ணா

மாலை 4-மணிக்கு தெப்பக்குளம் வீதியிலுள்ள நகரக் கழகத்திலிருந்து யானைமீது முரசொலித்து ஊர்வலம் புறப்படும்.

இரவு 9-மணிக்கு பெரியநாயக்கன் பாளையத்தில் அண்ணா பேசுவார்.

★

சேலம் :
தலைவர்: மெய்யப்பன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
ஈ. ஆர். கிருஷ்ணன்

மாலை 3 மணிக்கு கழகக் கட்டிடத்திலிருந்து மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்படும்.

★

திருப்பத்தூர் (வ. ஆ.) :
தலைவர் : வீரபத்திரனார்
பேசுவோர் :
என். வி. நடராசன்
நெடுஞ்சோழன்

★

திருச்சி :
தலைவர்: எஸ். ஏ. ஜி. ராபி
பேசுவோர்:
மு. கருணாநிதி, எம்.எஸ்.மணி
எஸ். நெடுமாறன்

மாலை 5-மணிக்கு மெயின்கார்ட் கேட்டிலிருந்து தோழர் மு. கருணாநிதி தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

மதுரை :
பேசுவோர் :
கி. மனோகரன்,
கே. எஸ். சந்தானம்

மாலை 5 மணிக்கு தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில், வடக்கு மாசிவீதி மறுமலர்ச்சிக் கழகத்திலிருந்து மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நான்கு மாசிவீதி, நான்கு வெளி வீதிகள் வழியாகத் திலகர் திடலையடையும்.

★

திண்டுக்கல் :
தலைவர் : கே. செயராசு
பேசுவோர் :
என். முத்து, பி. சமதர்மம்,
ஏ. சுப்பையா, ஜி. ஜான்

மாலை 4 மணிக்கு தோழர் ஏ. ஜான் தலைமையில் சோலை ஹால் திடலிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

★

அறந்தாங்கி :
தலைவர் : எம். குமரய்யா
பேசுவோர் :
முக. மீரா, இராம. அசோகன்
சுப. சதாசிவம்
இசை : மஜீத்

மாலை 4-மணிக்கு கழகப் பணிமனையிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

★

மதுராந்தகம் :
தலைவர் : டி. பார்த்தசாரதி
பேசுவோர் :
எம். எஸ். வெங்கடாசலம்
பி. சிவானந்தம்
எம். எம். இராசாபாதர்
எம். எல். பாலு

மாலை 3-மணிக்கு ஊர்வலம்.

★

ஆரணி (வ. ஆ.)
தலைவர் : எஸ். ஏ. கன்னையன்
பேசுபவர் :
எஸ். எஸ். தென்னரசு

★

உசிலம்பட்டி :
தலைவர் : மதுரை எஸ். முத்து
பேசுவோர்:
உசிலைத்தம்பி, அனிபா,
கார்த்திகைசாமி
ல. சௌந்திரபாண்டியன்
இசை : கே. பி. யோகராசன்

மாலை 5 மணிக்கு கீழப்புதூரிலிருந்து இந்தி எதிர்ப்பு ஊர்வலம் புறப்படும்.

தூத்துக்குடி :
பேசுபவர் :
க. அன்பழகன்

★

ஞாயிறு (கிராமம்)
தலைவர் : எம். தைரூப்
பேசுவோர் :
வி. எஸ். கோவிந்தராசன்
ஆர். ஜார்ஜ், க. சிதம்பரம்,
ஏ. இராதாமணாளன்

மாலை 3-மணிக்கு ஊர்வலம்

★

கவசம்பட்டு :
தலைவர் : கே. மாணிக்கம்
பேசுபவர் :
சி. வி. எம். அண்ணாமலை

★

வால்பாறை :
பேசுவோர் :
கே. சூரியமான், எஸ். கணபதி
கே. பி. மருதமுத்து, ஜெபக்கனி

★

பண்ணுருட்டி :
தலைவர்: ச. இராமச்சந்திரன்
பேசுவோர் :
ந. இராசகோபால்
பி. ஜானகிராமன்
எஸ். அண்ணாமலை
க. கோவிந்தன்

★

வேலூர் (வ. ஆ.) :
பேசுவோர் :
எம். பி. சாரதி எம் எல் ஏ.
ஏ. எஸ். இமயவரம்பன்
வி. ஏ. இளஞ்செழியன்
மணிஎழிலன், பாண்டியன்

மாலை 3 மணிக்கு தோழர் வி. எம். தேவராஜ் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

வேலநத்தம் (சேலம்) :
தலைவர் : வி. சிவப்பிரகாசம்
பேசுபவர்: இரா.நெடுஞ்செழியன்

★

திண்டிவனம் :
தலைவர் : எஸ். பாண்டுரங்கன்
பேசுபவர் : க. அறிவழகன்

மாலை 4 மணிக்கு, திரௌபதையம்மன்கோவில் அருகிலிருந்து தோழர் ஏ.பெருமாள் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

திருப்பரங்குன்றம் :
தலைவர் : பி. சுப்பிரமணியம்
பேசுவோர் :
கே. ஆர். பி. மணிமொழியன்
இரா. சு. அரசக்கண்ணன்

மாலை 4 மணிக்கு திராவிடப் பகுத்தறிவு மன்றத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்.

★

வளவனூர் :
தலைவர் :
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
பேசுபவர் : கண்ணதாசன்

சினிமாத் திடல் அருகிலிருந்து மாலை 5 மணிக்கு தோழர் க. பழனியப்பன் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

ஏத்தாப்பூர் :
தலைவர் : ஒய். எல். கலியமூர்த்தி
பேசுவோர் :
ப. கண்ணன், ஏ. ஆனைமுத்து
இரா. பூவராகசாமி
ஒய். எல். பரமசிவம்

★

ஏரல் :
பேசுவோர் :
இரத்தினவேல்பாண்டியன்
ஆரியசங்காரன், அண்ணாமலை
முத்து, கே சுப்பையா

மாலை ஊர்வலம் உண்டு

★

காட்டுப்பாடி :
தலைவர் : இலக்குவனார்
பேசுவோர் :
வி.ஏ.பசூல், அ. கருத்தோவியன்,
வி. ஏ. அன்பாளன், புகழேந்தி,
தம்பிதாசன்

சென்னை நகரத் தோழர்களுக்கு :

13—10—57-ல், சென்னை நகரில் ஒவ்வொருவட்டத்திலும் நடைபெறவிருக்கும் ஊர்வலங்களின் விவரமும், மாவட்டக் கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் ஊர்வலம் எந்தெந்த வழியில் செல்லும் என்ற விவரமும், மாலை பொதுக்கூட்ட விவரமும் நாளை (12—10—57) இதழில் 3-ம் பக்கத்தில் வெளிவரும். (ஆ-ர்.)

ஆத்தூர் :
தலைவர் : ஆர். கன்னையன்
பேசுவோர் :
இரெ. இளம்வழுதி
எம்.பி.சுப்பிரமணியம்எம்.எல்.ஏ
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

மாலை 4 மணிக்கு ஆத்தூர் உயர்நிலைப்பள்ளி முன்பிருந்து தோழர் ஏ. குள்ளப்பன் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

செங்கற்பட்டு :
தலைவர் : சே. ஏ. பலராமன்
பேசுவோர் :
என். சிவரத்தினம்
ஜெ. ஏ. வகாப்
சோ. க. சுந்தரேசன்
சே. ப. வேணு

மாலை 3 மணிக்கு மணிக்கூண்டிலிருந்து தோழர் செ. த. செயராமன் தலைமையில் ஊர்வலம் புறப்படும்.

★

சேவூர் (ஆரணி) :
தலைவர் : ஏ. கே. குமாரவேலன்
பேசுவோர் :
வி. பரசுராமனார்
ஆர். கே. மாதவன்
எஸ். ஜி.கோபாலன், மு.சோமு,
போ. ர. செயராமன்
இர. புருசோத்தமன்
சி. என். சானகிராமன்
எஸ். ஏ. கைலேசன்

★

குன்றத்தூர் :
தலைவர் : ப. கு. ஆறுமுகம்
பேசுவோர் :
சுவாமி அருணகிரிநாதர்
தி. ந. சம்பந்தம்

மாலை 4 மணிக்கு ஊர்வலம் உண்டு.

★

எளம்பிள்ளை
பேசுபவர் :
ஆர். எஸ். பாண்டியன்

★

பெரியகுப்பம்
தலைவர் : கோவிந்தசாமி
பேசுவோர் :
காஞ்சி-மணிமொழியார்
பி. கே. வாசுதேவன்
டி. பி. பாலன், ப. எத்திராசன்
ஏ. பி. சாமி,

மாலை 3 மணிக்கு ஏ. பி. சாமி கடை அருகிலிருந்து ஊர்வலம் புறப்படும்.

★

அமிர்தவிளை நகர்
பேசுவோர் :
இரா. நல்விளைவேல்
கே. தளபதி சேர்மத்துரை

மல்லூர் (சேலம்) :
தலைவர் : எம். கே. பெரியசாமி
பேசுவோர் :
எஸ். அப்பாவு, டி. நடேசன்

★

தாராபுரம் :
தலைவர் : கா. வே. குப்புசாமி
பேசுவோர் :
நாராயணன், சிதம்பரனர்,
எஸ். ஏ. குஞ்சு

மாலை 3-மணிக்கு இஸ்லாமியர் பேட்டையிலிருந்து ஊர்வலம் புறப்படும்.

மேல்மங்கலம் :
தலைவர் : கருப்பையா
பேசுவோர் :
ப.குறள்தாசன், வீ.வே.குருசாமி,
தா. பாண்டியன்
சே. இராசரத்தினம்
எஸ். எஸ். இராதா

★

குடந்தை :
பேசுவோர் :
கே. ஏ. மதியழகன்
காஞ்சி-கல்யாணசுந்தரம்
கே. கே. நீலமேகம்
பொ. தருமன்

★

காஞ்சிபுரம் .
பேசுபவர் : இரா. செழியன்

★

மேலூர் :
பேசுவோர் :
ஏ. வேலுச்சாமி, மு. சேக்தாவூத்,
மு. க. இளமொழி, அசோகன்,
கா. மு. காதர்மொய்தீன்
ச. தாவுதுசுலைமான்
பெ. நாராயணன்
ச. பெ. மலைச்சாமி

★

ஊர்வலங்கள் :

மாயூரம் : மாலை 3 மணிக்கு, முசாபரி பங்களாவிலிருந்து தோழர் கே. எஸ். சௌந்தரராசன் தலைமையில் ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளில் செல்லும்.

கள்ளிவாடி (தாரை வட்டம்): தி. மு. கழகச் சார்பில் மூலனூர் முசாபரி பங்களா விலிருந்து ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்படும்.

மன்னார்குடி : மாலை 4 மணிக்கு வட்ட தி.மு. கழகச் சார்பில் கீழப்பாலத்திலிருந்து, ஓர் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு மாலை 6 மணிக்கு தேரடியில் நடக்கும் பொதுக்கூட்டத்தை வந்தடையும்.

பண்ணுருட்டி : மாலை 4 மணிக்கு, தண்டபாணி டாக்கீஸ் திடலிலிருந்து, தோழர் பி. ஜானகிராமன் (1—1—49-ல் இந்தி எதிர்ப்பில் சிறைசென்றவர்) தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகள் வழியே சென்று காந்தி திடலையடையும்.

புதுப்பேட்டை—(தெ. ஆ.) மாலை 4 மணிக்கு தி. மு. க. சார்பில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முக்கிய வீதிகளில் செல்லும்.

கரூர் : மாலை 4 மணிக்கு கரூர் நகர தி. மு. கழகச் சார்பில் தோழர் பி. மாணிக்கம் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, முதாதராசபுரம் சென்றடையும். அங்கு நடக்கும் பொதுக்கூட்டத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேற்றப்படும்.

திருச்சி பீடி, சுருட்டு தொழிலாளர் சங்க முதலாவது மாநாடு

13—10—57 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில் தோழர் எம்.கே.எம். அப்துல்சலாம் எம்.பி., தலைமையில் மாநாடு நடைபெறும். தோழர் சிற்றரசு-சுப்பிரமணியம் மாநாட்டைத் திறந்து வைப்பார். தோழர் எஸ். ஏ. ஜி. ராபி கொடி உயர்த்துவார். தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., பி. ஆர். இராமசாமி, எஸ். ஜி. கிருஷ்ணன் தோழியர் சேசியம்மாள் ஆகியோர் பேசுவர். காலை 8 மணிக்கு, திருச்சி சவுக்மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்படும்.

கழகக் கூட்டம்

கே. ஆர். தோப்பூர் :
12—10—57 மாலை 6-மணிக்கு
தலைவர் : டி. எம். மாரிமுத்து
பேசுவோர் :
ஈ. ஆர். கிருஷ்ணன்
என். எஸ். சோமசுந்தரம்
பி. எஸ். அம்பாயிரம்

★

தாமல்
12—10—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஆர். எஸ். பாண்டியன்
சி. வி. எம். அண்ணாமலை

மகளிர் மன்றம்

இந்தி எதிர்ப்புக் கூட்டம்

12—10—57 மாலை 6 மணிக்கு, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு, 8-எண்ணுள்ள மகளிர் மன்ற அலுவலகத்தில் டாக்டர் சத்தியவாணிமுத்து தலைமையில் மகளிர் கூட்டம் ஒன்று நடைபெறும்; அதுபோது, தோழியர்கள் பலர், 'இந்தி நுழைவும்—மகளிர் கடமையும்' என்பது பற்றிப் பேசுவர்.

கா. அப்பாதுரையார் படத் திறப்பு விழா

12—10—57 மாலை 9 மணியளவில், சென்னை — சேப்பாக்கம் அழகிரி மன்றச் சார்பில் அழகிரி திடலில் (வெங்கடேச நாய்க்கன் தெரு) தோழர் நீலநாராயணன் தலைமையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் படத்திறப்பு விழா நடைபெறும். தோழர் கண்ணதாசன் படத்தைத் திறந்து வைப்பார். தோழர்கள் கி. மனோகரன், என். சிவரத்தினம், எம். கே. மணி ஆகியோர் பேசுவர்.

மணவழகர் மன்றத்தில் காந்தி படத் திறப்பு

12-10-57 மாலை 6-30 மணிக்கு சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை மணவழகர் மன்றத்தில் தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமையில் சுவாமி அருணகிரிநாதர் அவர்கள் காந்தியார் படத்தைத் திறந்துவைப்பார். புலவர் மா. நன்னன் சொற்பொழிவாற்றுவார்.

கோவையில் சிறப்புக் கூட்டம்

13—10—57 காலை 9 மணிக்கு, கோவை சண்முகா தியேட்டரில் நகர தி. மு. கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் சிறப்புக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

சென்னை—விருகம்பாக்கம்

தோழமைக் கழக பொதுக்கூட்டம்

12—10—57 மாலை 6 மணிக்கு சென்னை — கோடம்பாக்கத்தையடுத்த விருகம்பாக்கம் தோழமைக் கழகச் சார்பில் கோல்டன் ஸ்டூடியோ அருகாமையில் தோழர் ஜெகநீசன் தலைமையில் இந்தி எதிர்ப்பு பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் மா. செங்குட்டுவன், சைதை-சம்பந்தம், சா. வல்லவன், வி. பி. தரணி மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

'நெஞ்சம்'—நாடகம்

12—10—57 இரவு 9-30 மணிக்கு, காவேரிப்பட்டினம் கே. வி. கே. சாமி அரங்கில், அண்ணா தலைமையில், உதய சூரியன் நாடக மன்றத்தாரின் 'நெஞ்சம்' என்னும் நாடகம் (காவேரிப்பட்டினம் தி. மு. கழக வளர்ச்சி நிதிக்காக) நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.